இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஓர் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பு பல்வேறு தாவரங்கள் அருகருகே செழிக்க அனுமதிப்பது போல,ஓர் ஆரோக்கியமான சமூக கலாச்சாரமும் பல்வேறு சமூகங்கள் நல்லிணக்கத்தில் செழிக்க அனுமதிக்கிறது என்றும், அத்தகைய கலாச்சாரத்தை நாம் கவனமாக வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

# கலாச்சாரம் என்பது வளமான பாரம்பரியம்



வங்காளதேசத்தில் நடைபெற்ற பல்சமய உரையாடல் கூட்டத்தின்போது

கலாச்சாரம் என்பது ஒவ்வொரு மக்களையும் வகைப்படுத்தும் கலைகள், கருத்துக்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் வளமான பாரம்பரியம் என்றும், அதே நேரத்தில், கலாச்சாரம் என்பது வளர்ச்சியைத் தக்கவைக்கும் ஒரு வளர்ப்பு வழலாகப் புரிந்து கொள்ள முடியும் என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

செப்டம்பர் 6 முதல் 12 வரை வங்காளதேசத்தின் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பல்சமய உரையாடல் கூட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்து அனுப்பிய செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

“சகோதர சகோதரிகளுக்கு இடையே நல்லிணக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல்” என்ற கருப்பொருளில் சிறப்பிக்கப்படும் இக்கூட்டத்தின் பங்கேற்பதன் வழியாக, நாம் அனைவரும் கடவுளுடையக் குழந்தைகள், சகோதர சகோதரிகள் எனவே ஒரு குடும்பமாக, நல்லிணக்கம் மற்றும் அமைதியின் கலாச்சாரத்தை தொடர்ந்து வளர்ப்பதற்கான வாய்ப்பையும் பொறுப்பையும் பகிர்ந்து கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

ஓர் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பு பல்வேறு தாவரங்கள் அருகருகே செழிக்க அனுமதிப்பது போல,ஓர் ஆரோக்கியமான சமூக கலாச்சாரமும் பல்வேறு சமூகங்கள் நல்லிணக்கத்தில் செழிக்க அனுமதிக்கிறது என்றும், அத்தகைய கலாச்சாரத்தை நாம் கவனமாக வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

நல்லிணக்கத்தின் கலாச்சாரம் புறக்கணிக்கப்படும்போது, களைகள் அமைதியை நெரித்துவிடும் என்பதை வரலாற்றின் வேதனையான தருணங்களிலிருந்து நாம் அறிகின்றோம் என்று சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை அவர்கள், அச்சூழலில் சந்தேகங்கள் வேரூன்றும், ஒரே மாதிரியான கருத்துக்கள் கடினமடையும், வன்முறையாளர்கள் பிரிவினையை நம்மில் விதைக்க நமது அச்சங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மதங்களுக்கு இடையேயான உரையாடலில் நண்பர்களாக, உடன்பிறந்த உணர்விற்கானக் களத்தை வளர்க்கும் தோட்டக்காரர்களைப் போல நாம் இருக்க வேண்டும் என்றும், உரையாடலை நம்மில் வளமாக வைத்திருக்கவும், தப்பெண்ணத்தின் களைகளை அகற்றவும் பல்சமய உரையாடல் வழியாக நாம் உதவ வேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# மொராக்கோ நிலஅதிர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் காரித்தாஸ்


நில அதிர்வால் பாதிக்கப்பட்ட பகுதி (AFP or licensors)

மொராக்கோவில் ஏற்பட்டுள்ள நிலஅதிர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியினை அங்குள்ள காரித்தாஸ் அமைப்பு முன்னெடுத்து செய்து வருகின்றது என்றும், மக்களின் மாண்பு, சமூக நீதி, ஒற்றுமை போன்றவற்றை வழங்க அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புணர்வோடு அப்பணியினைச் செய்து வருகின்றது என்றும் கூறினார் மொராக்கோ காரித்தாஸ் அமைப்பின் தலைவர் பெனடிக்ட் பெர்கோர்ன்.

செப்டம்பர் 8, 2023 அன்று, உள்ளூர் நேரம் இரவு 11:00 மணிக்கு, மொராக்கோவில் ஏற்பட்ட 6.8 ரிக்டர் அளவிலான நிலஅதிர்வினால் 2,946 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 5,674 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் எடுத்துரைத்தார் பெர்கோர்ன்.

பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் வீடுகள் மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்புகள் கடுமையாக அழிக்கப்பட்டதால், இடம்பெயர்ந்தவர்களுக்கு வீட்டுவசதிக்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது என்று கூறிய பெர்கொரான் அவர்கள், 59,674 வீடுகள் அழிக்கப்பட்டன அல்லது சேதமடைந்தன என்று மொராக்கோ அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதாகவும் கூறினார்.

நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட சாலைகள் மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகளை சிக்கலாக்கின என்றும், அருகிலுள்ள அட்லஸ் மலைகளில் அமைந்துள்ள தொலைனர கிராமங்கள் குறிப்பிடத்தக்க சேதத்தை சந்தித்தன என்றும் பகிர்ந்தார் பெர்கோர்ன்.

மொராக்கோ மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமனதுடன் உதவ முன்வந்தனர் என்றும், தங்கள் சக குடிமக்களுக்கு உணவு, போர்வைகள் மற்றும் பிற அடிப்படைத் தேவைகளை வழங்க அதிக எண்ணிக்கையில் விரைந்தனர் என்றும் கூறினார்.

உயிர் பிழைத்தவர்களின் தேவைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, அரசாங்கம் பொருளாதார உதவியை வழங்கி வருகின்றது என்றும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அவசரத் தேவைகளான, தற்காலிக தங்குமிடங்கள், உணவுக்கூடைகள், நலவாழ்வுப் பெட்டிகள் மற்றும் விளக்குகளுக்கான விளக்குகளை விநியோகிப்பதை செய்து வருகின்றது என்றும் குறிப்பிட்டார் பெர்கோர்ன்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# மிகவும் மோசமான போர்ச்சூழலில் உலகம் உள்ளது

கத்தாரின் ஹமாஸ் மீதான இஸ்ரேலின் தாக்குதல் உலகம் மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளதை எடுத்துரைக்கின்றது என்றும், அமைதிக்காக நாம் கடுமையாக செபிக்க வேண்டும், தொடர்ந்து அதற்காகப் பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

செப்டம்பர் 9, செவ்வாயன்று திருத்தந்தையரின் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்ஃபோவிலிருந்து வத்திக்கான் இல்லம் திரும்பும் முன் செய்தியாளர்களுக்கு கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கத்தாரின் தோஹாவில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு குறித்த பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளித்த திருத்தந்தை அவர்கள், அங்கு நடக்கும் நிகழ்வுகள் உலகம் எதை நோக்கிச் செல்கின்றன என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும், அமைதிக்காக நாம் கடுமையாக ஜெபிக்க வேண்டும், அமைதியை வலியுறுத்த வேண்டும் என்றும் கூறினார்.

காசா நகரில் இருந்து வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைக் குறித்து, அங்குள்ள தலத்திருஅவை அருள்பணியாளரைத் தொடர்பு கொள்ள முயற்சித்ததாக கூறிய திருத்தந்தை அவர்கள், கத்தாரின் தோஹாவில் இஸ்ரேல் குண்டுவீசியதில் தலைநகரில் உள்ள பல குடியிருப்பு கட்டிடங்கள் தாக்குதலில் பாதிக்கப்பட்டன என்றும் எடுத்துரைத்தார்.


கத்தாரின் ஹமாஸில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு (AFP or licensors)

அமைதிக்காக கடுமையாக ஜெபியுங்கள், உழையுங்கள் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், மத்திய கிழக்கில் என்ன நடக்கிறது என்பது குறித்து தனது கவலையை வெளிப்படுத்தினார். மேலும் முழு சூழ்நிலையும் உண்மையிலேயே தீவிரமானது, என்று கூறிய திருத்தந்தை அவர்கள் காசாவிலுள்ள திருக்குடும்ப பங்குத்தளத்தின் அருள்பணியாளர் கேப்ரியல் ரோமானெல்லியைத் தொடர்பு கொண்டு சூழல் குறித்து அறிந்துகொண்டதாகவும் எடுத்துரைத்தார்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# உறவாடும் குடும்பம் ஆசிரியர்களுடன் பேராயர்

கடந்த மாதம் 25ஆம் திகதி உறவாடும் குடும்பம் இதழின் ஆசிரியர் குழுவினர் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுடனான சந்திப்பும் தியானமும் நடைபெற்றது.

உறவாடும் குடும்பம், மாதாந்திர தமிழ்மொழி இதழுக்கு அருள்பணியாளர் ஞானசெல்வம் அவர்கள் புதிய ஆசிரியராக பொறுப்பேற்றுள்ளார். துணை ஆசிரியர்களாக அருள்பணியாளர்கள் தனிஸ்லோஸ், ம.தேவதாசன், அருள்நாதன் ஜோசப் ஆகியோர் உள்ளனர். இவர்களோடு பொதுநிலையினர் ஆர்கே. சாமி, டிக்குருஸ், எஸ்.டேவிட், வ.யூ.யூலியன், அந்தோனி இன்னாசி, ஆ,வி,டேவிட், மற்றும் அலுவலகப் பொறுப்பாளர் சகோ.மெக்டலின் ராஜூ ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துக் கொண்டனர்.

இறைவாசகம் வாசித்ததோடு அதனைத் தியானித்து, தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டனர்.

பேராயர் அவர்கள் பேசுகையில், இறைவசனத்தில் குறிப்பிட்டுள்ளது போல் ஞானத்தோடும் அறிவோடும் படைப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் குடும்ப இதழ் எனும் பலம் இருக்கும். இடம் பெறும் அன்றாட வாசகம், கருத்தாழமிக்க மாதாந்திர படைப்புகள் யாவும் மக்கள் வாசித்து பயன் பெற



உறுதுணையாக இருத்தல் வேண்டும். தமிழ் மொழி பேசும் அனைவரும் இந்த இதழைப் பெற்று ஆதரவு தர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

ஆ.வி.டேவிட்.
உறவாடும் குடும்பம்.



# புதுப்பித்தலின் பயிற்சியில் எனது அனுபவங்கள்

செந்தூலில் உள்ள புனித யோசேப்பு தேவாலயத்தில் நடைபெற்ற கோலாலம்பூர் வடக்கு மாவட்ட தமிழ் மறைபோதக உருவாக்கத் திட்டத்தை 3 தனித்தனி அமர்வுகளுடன் முடித்துள்ளேன். இந்த திட்டத்தின் மூலம், ஒரு மறைபோதகர், கிறிஸ்துவின் சீடர் ஆகிய இரு வகையிலும் மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றேன் என்பதில் மகிழ்ச்சி. இன்றைய உலகில் மறைபோதகத்தின் முக்கிய பங்கு பொறுப்புகள் பற்றிய ஆழமான புரிதலை இப்பயிற்சி வழங்கியது.

மற்ற பங்குகளின் சக மறைபோதகர்களால் சூழப்பட்ட எனக்கு, ஒவ்வொன்றும் அவற்றின் தனித்துவமான பயணத்தைக் கொண்டுள்ளன, நாம் அனைவரும் ஒரு பெரிய பணிக்கு முக்கிய பங்காக இருக்கிறோம் - அன்பு, நம்பிக்கை மற்றும் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள அழைப்பு, குறிப்பாக இளைய தலைமுறையினருடன் வேரூன்றியுள்ளது என்பதை நினைவூட்டின.

இந்த அமைப்பு கற்பித்தல் முறைகளில் மட்டுமல்ல, ஒரு மறைபோதக அடையாளத்திலும் கவனம் செலுத்தியது. ஒரு மறைபோதகம் என்பது பாடங்களை வழங்குவது அல்லது குழந்தைகளை அருட்சாதனங்களுக்குத் தயார்படுத்துவது மட்டுமல்ல - அது கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பது மற்றும் அவர்களின் விசுவாசப் பயணத்தில் மற்றவர்களுடன் நடப்பது பற்றியது என்பதை எனக்கு நினைவூட்டியது. இந்த அமர்வுகள் எனது சொந்த ஆன்மீக வாழ்க்கையைப் பற்றியும், மற்றவர்களை மிகவும் உண்மையாக வழிநடத்துவதற்காக கடவுளுடனான எனது உறவில் நான் எவ்வாறு வளர அழைக்கப்படுகிறேன் என்பதையும் ஆழமாகச் சிந்திக்க ஊக்குவித்தன.

வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய நடைமுறை மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய வழிமுறைகளைப் பற்றி கற்றுக்கொள்வது எனக்கு ஒரு சிறப்பானதொன்றாக இருந்தன. வேத நாடகங்கள் முதல் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் மற்றும் ஜெபத்தின் மூலமாக, குழந்தைகளுக்கு நம்பிக்கைப் பாடங்களை உயிர்ப்பிக்க புதிய கருவிகளைக் கற்றுக்கொண்டேன். இந்த முறைகள் பயனுள்ளவை மட்டுமல்ல, நமது நம்பிக்கையைப் பற்றி அறிந்து கொள்வதில் மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் வளர்க்கின்றன - இன்றைய உலகில் இது மிகவும் முக்கியமானது என்று நான் நம்புகிறேன்.

வகுப்பறை நுட்பங்களுக்கு அப்பால், என்னை உண்மையிலேயே நெகிழ வைத்தது திட்டத்தின் ஆன்மீக ஆழம். பிரதிபலிப்புகள், பகிர்வு அமர்வுகள் மற்றும் செபத்தின் தருணங்கள் ஆகும்.

இந்த அமைப்பை அர்த்தமுள்ளதாகவும் ஊக்கமளிப்பதாகவும் மாற்ற தங்கள் நேரத்தையும் முயற்சியையும் செலவிட்ட அமைப்பாளர்கள், பேச்சாளர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துகொள்ளுகிறேன்.

அவர்களின் மறைபோதனை மீதான ஆர்வமும், என்னைப் போன்ற மறைபோதனையாளர்களை வளர்ப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்பும் உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

நான் எனது திருச்சபைக்கும் எனது வகுப்பறைக்கும் திரும்பும்போது, புதிய தெளிவு, நம்பிக்கை மற்றும் இரக்க உணர்வுடன் பணியாற்ற முயல்கிறேன்.

மறைபோதனையாளர்களாக, நாம் ஒருவருக்கொருவர் தொடர்ந்து ஆதரவளித்து, ஒரு சமூகமாக வளருவோம், இதன் மூலம் நாம் ஒன்றாக வரும் தலைமுறைகளுக்கு நம்பிக்கையின் வலுவான அடித்தளங்களை உருவாக்க முடியும்.

டேனியல் தாஸ்

# செம்மண் தோட்டத்து புனித அன்னம்மாள் சிற்றாலய புனித யாத்திரை

கிள்ளான் புனித அன்னம்மாள் நம்பிக்கையாளர்கள், ஜொகூர், பாமோல் தோட்ட புனித அன்னம்மாள் சிற்றாலயத்திற்கு, புனித யாத்திரை மேற்கொண்டனர். அவர்களை சிற்றாலயத் தலைவர் சகோ.அந்தோனி அவர்கள் வரவேற்றார். சகோ. பிரான்சிஸ் அவர்கள் ஆலயத்தின் வரலாற்று குறித்து விளக்கம் அளித்தார். இவ்வாண்டு 41-ஆம் ஆண்டு விழாவாக திருவிழா கொண்டாடப்பட்டது. சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். இவர்களில் இந்து சகோதர சகோதரிகளும் அடங்குவர். சுமார் இரண்டு மணி நேரம் இந்த செம்மண் தோட்டத்தின் புனித அன்னம்மாள் சிற்றாலயத்தில் செபம், அன்னம்மாள் மன்றாட்டு மாலை என ஒப்புக்கொடுக்கப்பட்டு, தேநீர் உபசரிப்புடன் விடை பெற்றனர்.

ஆ.வி.டேவிட்.





# இறைவனா? செல்வமா?

**பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு.**
**ஆமோ8: 4-7, 1தீமோ2; 1-8. லூக்16: 1-13.**

திருஅவை இன்று பொதுக்காலத்தின் 25ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது. முதல் வாசகத்தில் ஆமோஸ் இறைவாக்கினர் அநீதியாகச் செயல்படும் மக்களைக் கடுமையாகச் சாடுகின்றார். கடவுளின் சட்டத்தை கடைப்பிடிப்பதின் வழியாக வளமான எதிர்காலம் இருக்கிறதே தவிர, பலமற்ற மக்களை அழிப்பதல்ல எனும் மையக் கருத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

இரண்டாம் வாசகம், நம்பிக்கையாளர்கள் எல்லாருக்கும் அதுவும் குறிப்பாக நாட்டை ஆளும் ஆட்சியாளர்களுக்கும், உயர் நிலையிலுள்ள அனைத்து பொறுப்பாளர்களுக்கும் இறைவேண்டல் செய்ய நம்மை அழைக்கிறது.

ஆட்சி வளமாயிருந்தால், மக்கள் நலமாயிருப்பர், நாடும் சுபிட்சமாக வளரும். மக்கள் ஒற்றுமையுடனும் சகோதரத்துடனும் ஒற்றுமையே பலம் என மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

கடந்த மாதம் சுதந்திர தினத்தைக் கொண்டாடினோம். இம்மாதம் மலேசிய தினத்தைக் கொண்டாடும் நாம் நமது அரசருக்கும், நாட்டு தலைவர்களுக்கும் திருஅவையின் தலைவர்களுக்கும் செபிப்பது சாலப் பொறுத்தமாகும்.

நற்செய்தியில் வீட்டு பொறுப்பாளர் தன் தலைவரின் உடமைகளைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார். எனவே அப்பொறுப்பு அவரிடமிருந்து எடுக்கப்படுகிறது. இப்போது வீட்டு பொறுப்பாளரை வேலையில்லா திண்டாட்டம் ஆட்கொள்ளுகிறது. அவர் சிந்திக்கிறார்.

- மண்வெட்ட என்னால் முடியாதே.
- பிச்சை எடுக்கவும் வெட்கமாயிருக்கிறதே.
- பிறர் என்னை ஏற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்.

சிந்தனை ஒளி அவருக்குக் கிடைக்கிறது. முன்மதியோடு செயல் படுகிறார்.

ஆம், பிழைப்புத் தேடுவதற்கு இவ்வுலக மக்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர். ஒளியின் மக்களும் இவ்வளவான முயற்சிகளையும் மேற்கொண்டால் இறையரசையும் நீதியையும் எவ்வளவு தீர்க்கமாக ஏற்படுத்த முடியும்.

இறைவனா? செல்வமா? எனும் போராட்டத்தில் நமது நிலைபாடு என்ன?

ஓர் உண்மைச் சம்பவம்: பக்கத்து வீட்டில் திருப்பலி நடைபெற்று கொண்டிருக்கிறது. இவரோ, பணத்தை எண்ணிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது அவரின் மாமா திருப்பலிப்பூசைக்கு அழைப்பு கொடுத்தும் அவர் செல்லவில்லை. அவருக்காக அவர் மாமா மன்றாடினார். பலன் இன்று மனிதரை பிடிக்கும் பணியாளராக செயல்படுகிறார். ஆக, மற்றவர்களுக்கு நமது வேண்டுதல் அவசியம்.

ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.